IN THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (P.W.1 )**

Solemnly affirmed and sworn by Tr.Saravanan, Gr.III Bench Clerk on 18.07.2019 in accordance with the provisions of Act X of 3331.

அசல் வழக்கு எண். 257/2010

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குருசாமி | தாலுகா | |
| தகப்பனார் பெயர் | ராமசாமி | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

சா.சா.1 ஆக 18.07.2019 இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி முதல் விசாரணை

நான் மேலக்கோட்டை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற சம்மனை தொடர்ந்து சாட்சியம் அளிக்கிறேன். மேலக்கோட்டை கிராம சர்வே எண். 212/6பி-க்குரிய பழைய அ பதிவேடு சா.சா.ஆ.1. பட்டா எண். 767-க்குரிய சிட்டா சா.சா.ஆ.2. பட்டா எண். 4260க்குரிய சிட்டா சா.சா.ஆ.3. புல எண். 212-ன் வரைபடம் சா.சா.ஆ.4, தற்போதைய அ பதிவேடு மற்றும் அடங்கல் சா.சா.ஆ.5. பழைய சர்வே எண். 212/6பி-ல் பட்டாதாரராக முத்துக்குமார் மகன் பெருமாள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண். 212/6பி-ல் விஸ்தீரணம் 31-1/2 ஏர்ஸ். தற்போது மேற்படி சர்வே எண் பொன்னுச்சாமி மனைவி ராஜம்மாள் பெயரில் உள்ளது. மேற்படி ராஜம்மாள் பெயரிலான உத்தரவு மாவட்ட வருவாய் அதிகாரியின் இ.மு.எண்.28063/2010 G5, நாள் 25.11.2016-ன் படி மாறுதல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மாவட்ட வருவாய் அதிகாரி உத்தரவில் 21-1/2 ஏர்ஸ் விஸ்தீரணத்ததை தான் பட்டா மாறுதல் செய்ய உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவில் சர்வே எண். 212/6-ல் உள்ள இடத்தை பொறுத்து மட்டும் தான் உத்தரவு உள்ளது. மாவட்ட வருவாய் அதிகாரி உத்தரவு பிறப்பித்த தேதியில் சர்வே எண். 212/6 என முழுமையாக இல்லை என்றால் சரிதான். சர்வே எண். 212/6 பி என உட்பிரிவு செய்தது சம்மந்தமாக மாவட்ட

வருவாய் அதிகாரியிடம் விளக்கம் எதுவும கேட்டுக் கொள்ளவில்லை என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை**

சா.சா.ஆ.1-ல் விஸ்தீரணம் 31-1/2 ஏர்ஸ் என உள்ளது என்றால் சரிதான். புலத்தில் விஸ்தீர்ணம் 21-1/2 ஏர்ஸ் உள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.2 ஆவணத்தில் விஸ்தீரணம் 21-1/2 ஏர்ஸ் என உள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.3 ஆவணமானது ராஜம்மாள் என்பவர் மாவட்ட வருவாய் அதிகாரியிடம் கொடுத்த மனுவின் அடிப்படையில் மாவட்ட வருவாய் அதிகாரி பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் வட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்து அதன்பிறகு கிராம நிர்வாக அலுவலரால் உட்பிரிவு செய்யப்பட்டது. மாவட்ட வருவாய் அதிகாரியிடம் சர்வே எண். 212/6பி சம்மந்தமாக மேல்முறையீடு நடைபெற்றது என்றால் சரிதான். சர்வே எண். 212/6பி சம்மந்தமாக மேல்முறையீடு நடைபெற்றுள்ளது என்றும், ஆனால் மாவட்ட வருவாய் அதிகாரி உத்தரவில் சர்வே எண். 212/6 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.3ல் வட்டாட்சியரின் 2017/0103/24016381 நாள் 15.02.2017-ம் தேதியிட்ட உத்தரவுப்படி ராஜம்மாள் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டது. சர்வே எண். 212/6பி-ல் பட்டாதாரரான ராஜம்மாள் என்பவர் விவசாயம் செய்து அனுபவம் செய்து வருவது எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

மாவட்ட வருவாய் அதிகாரி உத்தரவில் சர்வே எண். 212/6 என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அது சர்வே எண். 212/6பி-யை குறிக்காது என்றால் சரிதான். சர்வே எண். 212/6-ஐ பொறுத்து ஏற்பட்டுள்ள உத்தரவு சர்வே எண். 212/6பி-யை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான்.

தாவா சொத்தை 6 மாத்திற்கு முன்பு நான் பார்த்துள்ளேன். தாவா சொத்தை அனுபவம் செய்வது சம்மந்தமாக பட்டாதாரரின் பெயரை ஆவணத்தின் அடிப்படையில் குறிப்பிடுவோம் என்றால் சரிதான். பெருமாள் கவுண்டரின் மகன் பாலுச்சாமி என்றால் சரிதான். பட்டா மாறுதல் உத்தரவுக்கு முன்பு ராஜம்மாள் பெயருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. ராஜம்மாள் பெயரில் பட்டா மாறுதல் செய்வதற்கு முன்பு வாதியின் தகப்பனார் பெருமாள் கவுண்டர் அனுபவத்தை பொறுத்து இருந்தார் என்றால் அனுபவத்தை பொறுத்து என்னால் சொல்ல முடியாது. ஆவணங்களுக்கு விரோதமாக யார் அனுபவத்தில் உள்ளது என்று சொல்ல இயலாது என்றால் சரிதான். வருவாய் துறை விதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுகுறுக்குவிசாரணை

அடங்கல் பதிவேடு எழுதுவதற்கு முன்பு புலத்திற்கு சென்று பின்னர் அனுபவதாரர் பெயர் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். மாவட்ட வருவாய் அதிகாரி உத்தரவின் முதல் பக்கத்தில் சர்வே எண்.212/6 என்றும், 212/6ஏ, 212/6பி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவின் நகல் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ளது என்றால் சரிதான்.